அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 09/93

பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 07.
1993, மே மாதம் 12....ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபன/ சட்டநியதிச் சபைகளின்
தலைவர்கள் அனைவருக்கும்.

அரச அலுவலர்களுக்கும் ஓய்வூதியம் பெறுநர்களுக்கும்
மேலதிகப் படி கொடுப்பனவு.

1989.12.27ஆந் திகதிய 63/89ஆம் இலக்க, 1990.11.29ஆந் திகதிய 50/90ஆந் இலக்க, 1991.12.25ஆந் திகதிய 50/90 (1)ஆம் இலக்க, 1992.09.25ஆந் திகதிய 50/90(111)ஆம் இலக்க, 1992.01.09ஆந் திகதிய 01/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றிக்கைகள் 1993.06.01ஆம் திகதியிலிருந்து மீளப்பெறப்படுகின்றன.

02. அரச பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுநர்கள் அனைவருக்கும் மாதப் படியாக ரூபா.600/-, 1993 ஜூன் 1ஆந் திகதியிலிருந்து கொடுபடும். ஓய்வூதியம் பெறுநர்களுக்கான கொடுப்பனவு ஓய்வூதியப் பணிப்பாளரால் வழமையாக ஓய்வூதியம் கொடுக்கும் அலுவலகங்கள் ஊடாகக் கொடுக்கப்படும்.

03. இக் கொடுப்பனவு தற்காலிக, அமைய, நாட்சம்பளம் பெறும் மற்றும் பதில் பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி குறித்த மாதத்தில் உச்சமாக 21 நாட்கள் என்பதற்கு உட்பட்டு, வேலை செய்த நாட்களின் எண்ணிக்கையினால் வாழ்க்கைச்செலவுப் படியின் 1/21ஐப் பெருக்கும் வீதத்தில் கணக்கிடப்பட வேண்டும்.

04. 1992.12.24ஆந் திகதிய 37/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரிவு 3 இற்கமைய 1993.06.01ஆந் திகதியிலிருந்து செயற்படுமாறு திருத்தப்பட வேண்டும்.

05. இம் முன்மொழிவை நடைமுறைப்படுத்தத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடுகளை வாழ்க்கைச் செலவுப்படிகள் கொடுப்பனவுக்கான விடயக் குறிப்பிலிருந்தும் மீள்வரும் செலவினங்கள் விடயங்களின் சேமிப்புகளிலிருந்தும், பெறக் கூடுமாயின் வீரமொன் நடைமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு பெற்றுக்கொள்ள முடியாதபோது மட்டும், கணக்கிடுவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட அடிப்படையைத் தெளிவுபடுத்தி வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரிடமிருந்து நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

06. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம். எம். என். ஜுனைட்
செயலாளர்
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.